# சங்ககால மகளிரின் வாழ்வியல் விழுமியங்கள்

***முனைவர் பி. விஜிலா ஜாஸ்மின் பிளவர்***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வுமையம்
ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7712

## முன்னுரை

சங்ககாலச் சமுதாயத்தில் மகளிருக்கு மிக உயர்ந்த இடமளிக்கப் பட்டுள்ளதை இலக்கியங்களின்வழி அறியமுடிகின்றது. காதல், இல்லறம், கல்வி, கலை விழாக்கள், பொழுது போக்குகள், ஆடையணிகள் ஆகிய அனைத்திலும் பெண்கள் சமப்பங்குப் பெற்று முழு உரிமையுடன் வாழ்ந்தனர். அவ்வாறு வாழ்ந்த மகளிர் தங்களின் வாழ்வியலை எவ்வாறு அமைந்துக் கொண்டனர் என்பதையும், இல்லற வாழ்வில் அவர்களின் நிலைப்பாட்டினையும் எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## சங்ககால மகளிரின் காதல் வாழ்க்கை

சங்ககாலப் பெண்களுக்குத் தங்குதடையற்ற விடுதலை உரிமை அளிக்கப்பட்டிருந்தது. மணம் ஆகும் முன்னரே காதல் புரிதல் மற்றும் காதலித்த ஆடவனுடன் உடன்போக்குக் கொண்டு வாழ்தல், பின்னர் மீண்டும் வந்து பெற்றோருடன் கூடி வாழ்தல் போன்றவை வழக்கில் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. இவை தகாதனவாகக் கருதப்படவில்லை. தடை செய்யப் படவும் இல்லை என்பதை சங்க இலக்கியப் பாக்களில் காணமுடிகின்றது.

## இல்லற வாழ்க்கை

அகவாழ்விற்கு அன்பு என்பது அடிப்படையாக அமைந்தது. "மனைக்கு விளக்கமாகிய வாணுதல்" என மனைவி புகழப்பட்டாள். மனைவியின் உயிராகக் கணவன் மதிக்கப்பட்டான் என்பதை,

**"நல்லோள் கணவன் இவன் என்னப்**
**பல்லோர் கூற"** **(குறுந்தொகை, பா.எ.14)**

வேண்டும் என ஆடவர் விரும்பியதை குறுந்தொகைப் பாடலின்வழி அறியமுடிகின்றது. மேலும், "மனையுறை மகளீரிக்கு ஆடவர் உயிர்" எனக் கூறிக் கொள்வதை மகளிர் விரும்பினர். தொடர்ந்து,

**"இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியர் என் கணவனை**
**யான கியர் நின் நெஞ்சநேர் பவளே"** **(குறுந்தொகை,பா.எ. 43)**

என்ற குறுந்தொகைப் பாடலின் வழி கணவன் மனைவி உறவில் இருந்த அன்பின தூய்மை, உறவின் செறிவும் ஆகியவற்றை அறியமுடிகின்றது.

கணவனின் உடல் மனம் ஆகிய இரண்டையும் பேணுவதிலும் மனைவி ஆர்வமும் ஈடுபாடும் காட்டியதாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. கணவனுக்கு இனிய உணவு சமைத்து அவன் உண்ணும் காட்சியைக் கண்டு மனைவி களித்ததை,

**"இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதில் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே"**
**(குறுந்தொகை, பா.எ.167)**

எனக் குறுந்தொகை குறிப்பிடுகிறது. கணவன் வறுமையுற்ற போது தந்தை தந்த செல்வத்தைப் பெறாது, அவனது வளத்திற்கு ஏற்ப மனைவி பொழுது மறுத்து உண்டதை நற்றிணை 110ஆம் பாடல் குறிப்பிடுகிறது. இச்சான்றுகள் இல்லற வாழ்க்கை பற்றி மகளிர் கொண்ட மனநிலையை விளக்கி நிற்கின்றன. பெண்ணிற் பெருந்தக்க யாவுள எனவும் மங்கலம் என்ப மனைமாட்சி எனவும் மகளிர் புகழப்பட்டமைக்கு அவர்தம் மனநிலையே காரணமாக அமைந்ததை அறியமுடிகின்றது.

### அரசியலில் மகளிர் நிலை

சங்க காலத்தில் மகளிர் ஆட்சி புரிந்ததாகவோ அமைச்சராக இருந்தாகவோ சான்று இல்லை. படைத் துறையிலும் பங்கேற்கவில்லை. ஆனால் புலவராக விளக்கி அரசர் மனத்திலும் அரசியலிலும் செல்வாக்குப் பெற்று விளங்கினார். சான்றாக, ஔவையார் அதியமானின் பொருட்டுத் தொண்டைமானிடம் தூது சென்றமை, நீண்டநாள் வாழத்துணை நிற்கும் நெல்லிக்கனி தான் உண்ணாது அதியமான் ஔவைக்கு அளித்தமை, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன்னைப் பாடிய காக்கைப் பாடினியார்க்கு ஒன்பது காப்பொன்னும் நூறாயிரம் கழஞ்சும் கொடுத்தமை போன்ற நிகழ்ச்சிகள் பெண்பாற் புலவர்கள் அரசியலில் பெற்றிருந்த செல்வாக்கை விளக்கமாக எடுத்துரைப்பதை அறிய முடிகின்றது.

பெண்பாற் புலவர்கள் தன்மானம் தாக்குறும்போது அரசனுக்கு அஞ்சாது அவன் முன் நின்று

**"எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே"**
**(புறநானூறு 206)**

எனச் செம்மாந்து கூறும் துணிவு கொண்டு விளங்கியதை அறியமுடிகின்றது.

### மறப்போரில் மகளிர் நிலை

மகளிர் போர்க்களம் புகுந்து போரிட்டதாகச் சங்க இலக்கியத்தில் சான்று இல்லை. எனினும் மற உணர்வில் ஈடு இணையற்று விளங்கித் தன் மக்களை மறப்போர் புரியத்தூண்டி நின்றமை காண்கிறோம்.

**"களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடன்"**
**(புறநானூறு,271)**

என்ற புறநானூற்றுப் பாடலடியில் மகனுக்கு ஒரு தாய் நினைவுட்டுகிறாள். தன் கணவன் போரில் வென்று திரும்ப வேண்டும் என வேண்டி ஒரு மனைவி நடுகல்லைத் தொழுது நிற்கிறாள். போரில் தன் கணவனையும், உடன்பிறந்தவனையும் இழந்த பின்னரும், போர்ப்பறை கேட்டு,

**"ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்கென"**
**(புறநானூறு -279)**

என்று ஒரு பெண் விடுத்து நிற்கிறாள். இவை மகளிர் காட்டிய மற உணர்விற்கு

**"படைக்கு நோய் எல்லாம் தானாக"**
**(புறநானூறு.276)**

நின்ற மறவனைப் புகழும் புலவர் அவனது தாயின் மேல் அப்புகழை நிறுத்திப் பேசுகிறார். பகைவரை வெல்லும் பாங்கில் தந்தையை ஒத்திருக்கிறாய் என ஒரு தாய் தன் மகனைப் பாராட்டுகிறாள். "தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே" (புறநானூறு .86) என ஒரு தாய் தன் மக்னை எண்ணிப்

பெருமைப்படுகிறார். புறமுதுகு இடாத மகனின் வீரமரணம் கண்ட ஒரு தாய்க்கு ஆனந்தப் பெருக்கால் வாடிய மார்பகங்களில் பால் ஊறிச் சுரந்தன. ஈன்ற ஞான்றினும் அவள் பெரிது உவந்து நின்றாள். தன் கணவன் தன்மார்பில் பாய்ந்து நின்ற வேலைப் பிடுங்கி எறிந்த போது களிறுகள் எல்லாம் புறங்கொடுத்து ஓடிய காட்சியைக் கண்டு ஒரு மனைவி புரித்து நிற்கின்றாள்.

இவை மகளிர் காட்டிய வீர உணர்வு, தன் மகன் போர்க்களத்தில் புறமுதுகு காட்டியிருந்தால் அவனுக்குப் பாலூட்டி வளர்த்த மார்பை அறுத்து எறிவேன் என வஞ்சினம் கூறியதை,

**"சிதைந்து வேறாகிய**
**படுமகன் கிடக்கை காணூஉ**
**ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே"**
**(புறநானூறு 273)**

என மகிழும் தாயைப் புறநானூறு புகழ்ந்து கூறுகிறது. தன் மகன் புறமுதுகு காட்டியதை அறிந்து போது கல்லாக் காளையை ஈன்ற வயிற்றை நோவும் தாயைத் தகடூர் யாத்திரை எடுத்துரைக்கிறது.

## சமய வழிபாட்டில் மகளிர் நிலை

மன்றங்களில் பலரும் கூடி வழிபடும் பொது வழிபடு, வீடுகளில் நடைபெறும் தனிவழிபாடு ஆகிய இரண்டிலும் மகளிர் பெரும்பங்கு ஏற்றனர். பொதுவழிபாட்டு இடங்களை மலர்களால் அணி செய்யவும் மேழுகவும், எனப் பகைப்புலத்தில் கொள்ளையிடப்பட்ட மகளிர் நியமிக்கப்பட்டத்தாகப் பட்டினப்பாலை (246-248) சுட்டுகிறது. தனிவழிப் பாட்டில் நெல்லும் மலரும் தூலி மாலைக்காலத்தில் மகளிர் வழிபாடு நிகழ்த்தினர். பெண்கள் வழிப்படச் செல்லும்போது புவும் புகையும் கொண்டு சென்றதாக மதுரைக் காஞ்சி (465-466) குறிப்பிடுகின்றது.

அகத்தில் தலைவியின் பொருட்டு எடுக்கப்படும் வெறியாட்டு மகளிரால் எடுக்கப்படும் சமய வழிப்பாடு ஆகும். மகளிர் வெறியாடிய களம் மலர்களால் நிரம்பிக் கிடத்தலைக் குறிஞ்சிப்பாட்டு (குறிஞ்சிப் பாட்டு 174-175) எடுத்துரைக்கின்றது.

தன் கணவன் போர்களத்திலிருந்து வெற்றியுடன் திரும்ப வேண்டும் எனவும் அழகும் நலமும் அளிக்குமாறும் வழிபாட்டின் போது வேண்டுகோள் இடப்பட்டன. போர் கடவுளாகிய கொற்றவை, கண்ணகியும் பண்டைய காலத்தில் வழிப்பட்டபட்ட பெண் தெய்வங்களாகும்.

## கல்வி கலைகளின் மகளிர் நிலை

ஓதல் பிரிவும் ஆடவருக்கு உரியதாக இலக்கண நூல்களில் குறிப்பிடப்படினும், சங்கக் காலத்தில் பெண்கல்வி மறுக்கப் பட்டமைக்குச் சான்றில்லை. பெண்கள் கல்வியில் உயர்ந்திருந்தனர் என்பது ஔவையார், காக்கைபாடினியர், வெள்ளிவீதியார் போன்ற பெண்பாற் புலவர்களின் பாடல்களிலிருந்து விளங்குகின்றது. சங்ககால மகளிர் சிற்பம், ஓவியம் ஆகிய கலைகளில் ஈடுபட்டதாக சங்க இலக்கியங்களில் குறிப்பு இல்லை. எனினும் தொழிலியல் ஆடல் பாடல்களிலும் விறலியரும் சமயத் தொடர்பான ஆடல் பாடல்களில் பிற மகளிரும் ஈடுப்பட்டதாக அறியமுடிகின்றது. மாதவி ஆடிய பதினோருவகையான ஆடல்கள் பற்றிச் சிலம்பு குறிப்பிடுகின்றது. நாடக மகளிர் ஆடுங்களம் பற்றிப் பெரும் பாணற்றுப்படை எடுத்துரைப்பதை அறிய முடிகின்றது.

## மகளிரின் பொழுதுபோக்குகள்

பந்து விளையாடுதல் பெண்களுக்குரிய சிறந்த பொழுது போக்காக அமைந்திருந்தது. ஆடவர் பந்து விளையாடுதற்குச் சான்றில்லை. ஆடவர் பந்து ஆடுதல் இழிவு எனக் கருதப் பட்டது. கழங்குச் செடியின் விதைகளால் ஆடப்படும் கழங்கு ஆடுதலும் பெண்களுக்குரிய விளையாட்டுயாகும்.

செல்வ மகளிர் பொன்னாலாகிய கழங்குகளை கொண்டு விளையாடினார். கழங்கு சிறுமியரால் விரும்பி விளையாடப்பட்டது. இவ்விளையாட்டுகள் மணல் பரப்பிய முற்றங்களில் நடைபெற்றன. இவை அகப்பொழுதுபோக்குகள் ஆகும்.

கடற்கரையில் இளப்பெண்கள் சிற்றில் இழைத்து விளையாடி மகிழ்ந்தனர். ஆறுகளில் புதுப்புனல் வரும் காலங்களில் ஆடவரோடு புனல் விளையாட்டில் மகளிர் கலந்து கொண்டனர். சுனைகளில் பெண்கள் அகம் மகிழ நீராடி விளையாதாக குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடுகின்றது. இவை புறப்பொழுதுப் போக்குகளாகும்.

## மகளிரின் ஒப்பனைகள்

இளம் மகளிர் கூந்தலுக்கு நெய் தடவி அதை ஐந்துபிரிவாக வகுத்து பின்னினார். முதுமகளிர் கூந்தலை வாரி முடித்துக் கட்டினார். மகளிர் நீராடியபின் கூந்தலுக்கு அகிற்புகை இடுவது வழக்கத்தில் இருந்தது. கண்களுக்கு மைத் தீட்டுவதும் காணப்பட்டது.

மணமான அல்லது காதல் உறவு கொண்ட பெண்களைத் தவிர பிறர் மலர் அணிந்தற்குச் சங்க இலக்கியத்தில் சான்று இல்லை. குழந்தைகளும் பருவமடைந்த மகளிரும், கைம்மை மகளிரும் பூச்சுடுவதுதில்லை. வேங்கை, வெட்சி, குவளை, அடும்பு, மல்லிகை, ஆகிய மலர்கள் விரும்பிச் சுடப்பட்டன.

சந்தனம் குங்குமம் ஆகியவற்றை மகளிரது மார்பில் புசி அதில் ஓவியங்களை வரைவது வழக்கமாக இருந்துவந்தது. இது தொய்யில் எனப்படும். தொய்யில் எழுதும் உரிமை காதலனுக்கே தரப்பட்டது. இவ்வாறு சங்ககாலச் சமுதாயத்தில மகளிரின், வாழ்வியல் விழுமியங்கள் அனைவராலும் போற்றிப் புகழப்பட்டன.

## முடிவுரை

இவ்வாறாக, சங்ககால மகளிரின் வாழ்வியல் விழுமியங்களாக, சங்கால மகளிர் திருமணத்திற்கு முன்பே காதல் புரிதல் மற்றும் காதலித்தவனுடன் உடன் போக்குக் கொண்டு வாழ்தல் என்றும், பின்னர் மீண்டும் வந்து பெற்றோருடன் கூடி வாழ்தல் போன்றவை வழக்கில் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. மேலும் இல்லறத்தில் மகளிர் சிறந்து விளங்கியதையும், மகளிர் மறப்போர்களில் ஈடுபட்டதையும், சமய வழிபாடு, கல்வி நிலைகளில் மகளிர் சிறந்து விளங்கிதையும் மகளிரின் வாழ்வியல் விழுமியங்களாகக் கருதப்படுகின்றது.

## துணைநூற்பட்டியல்

1. சங்க இலக்கியம் புறநானூறு - கு.வெ.பாலசுப்பிரமணியன் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - முதற்பதிப்பு 2004.
2. குறுந்தொகை மூலமும் உரையும் - கௌமாரீஸ்வரி - சீதை பதிப்பகம், கௌரா ஏஜென்சீஸ், சென்னை - முதற்பதிப்பு 2008.
3. சங்க இலக்கியமும் மூலமும் உரையும் - ச.வே.சுப்பிரமணியன் - மணிவாசகர் பதிப்பகம், சென்னை - முதற்பதிப்பு 2006.